**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**க. பொ. த. (சா/த)ப் பரீட்சை - 2017**

**இரண்டாம் தவணை**

**கிறிஸ்தவம் (NRC)**

சுட்டெண் :- ..........................................

**தரம் : - 11**

**நேரம் :- 3. 00 மணித்தியாலம்**

**பகுதி - I**

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

**(01)** 'காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்'' இங்கு பேரொளி என குறிப்பிடப்படுபவர்
(1) திருமுழுக்கு யோவான் (2) தாவீது (3) இயேசு (4) மோசே

**(02)** ''உலகின் பாவத்தைப் போக்குபவர்'' என இயேசுவை அறிமுகம் செய்தவர்
(1) எசாயா (2) திருமுழுக்கு யோவான்
(3) எரேமியா (4) சிமியோன்

**(03)** இயேசு என்னும் பெயரின் பொருள்
(1) கடவுள் விடுவிக்கிறார் (2) கடவுள் நம்மோடு
(3) கடவுள் துணை நிற்கிறார் (4) அருட்பொழுவு செய்யப்பட்டவர்

**(04)** ஆபிரகாம் பாபிலோனியாவிலிருந்து கானான் நோக்கி புறப்பட்ட காலப்பகுதி
(1) கி.மு 17ம் நூற்றாண்டு (2) கி.மு 16ம் நூற்றாண்டு
(3) கி.மு 18ம் நூற்றாண்டு (4) கி.மு 19ம் நூற்றாண்டு

**(05)** பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளைக்கு விரோதமான பாவமாகக் கருதப்படுவது
(1) சிலை வழிபாடுகளில் ஈடுபடுதல்
(2) களவு செய்தல்
(3) பிறருக்கு உரியவற்றை கவர்தல்
(4) யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொல்லுதல்

**(06)** இஸ்ராயேல் வரலாற்றில் அருட்பொழிவு செய்யப்பட்ட கூட்டத்தினராக கருதப்படாதோர்
(1) குருக்கள் (2) இறைவாக்கினர்
(3) உயர் அதிகாரிகள் (4) அரசர்கள்

**(07)** அமைதி பற்றி எசாயா குறிப்படுவது
(1) அன்புடனும் மகிழ்வுடனும் வாழும் வாழ்வு
(2) வெளிவாரியான பிரச்சனைகள் அற்ற நிலை
(3) ஒரு நாட்டின் எதிர்காலத்திற்கு உதவியாக அமைவது
(4) மனித உள்ளங்களில் ஆழமாக உருவாகும் சமாதானம்

**(08)** இறையரசின் பெறுமதிகளாக அமையாதது
(1) இறைபயம், நீதி, நேர்மை (2) அர்ப்பணிப்பு, நீதி, சமாதானம்
(3) நேர்மை, பொருளாதாரநலன், அர்ப்பணிப்பு (4) சமாதானம், இறைபயம், நேர்மை

**(09)** தீய ஆயரின் பண்பாக அமையாதது
(1) ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போவார்.
(2) நீர் நிலைகளுக்கு அழைத்துச் செல்வார்.
(3) மந்தைகளின் குரலுக்கு செவி சாய்க்கமாட்டார்.
(4) திருடர், கொள்ளையர் வருவதைக் கண்டு ஓடிவிடுவார்.

**(10)** "அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக" எனப் பவுல் கூறியது

(1) எபேசியருக்கு (2) கொரிந்தியருக்கு
(3) கொலோசேயருக்கு (4) உரோமையருக்கு

**(11)** "ஐரேனியா" எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்

(1) முழுமையான அன்பு (2) முழுமையான சமாதானம்
(3) யாவேயின் அன்பு (4) முழுமையான விசுவாசம்

**(12)** "எவரும் என்னை ஆண்டவரே எனச் சொல்லாதீர்கள் தலைவர் பணியாளராக வேண்டும்" எனும் வார்த்தையை தனது பணியின் அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டவர்

(1) அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய
(2) அருடதந்தை சந்திரா பர்ணாந்து
(3) தந்தை மைக்கல் ரொட்றிக்கோ
(4) அருட்பணி பீற்றர் ஜெறாட் டீ. சில்வா

**(13)** மன்னிக்க மறுத்த பணியாளன் உவமை மூலம் நாம் பெறும் முன்மாதிரிகள் அல்லாதது

(1) மன்னிப்பு வழங்குதல் இறை பண்பாகும்
(2) மன்னிப்பு கேட்டல் தவறானது அல்ல
(3) மன்னிப்பு வழங்குதல் எந்நேரத்திலும் அவசியமானது அல்ல
(4) மன்னிப்பு அனைவருக்கும் அவசியம்

**(14)** வேதாகமத்தில் "மேகம்" என்ற சொல் குறிப்பது

(1) வெளிச்சம் (2) பரிசுத்தம்
(3) வெளிப்பாடு (4) இறை பிரசன்னம்

**(15)** "இஸ்ராயேலரிடையே இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை" எனும் இயேசுவின் கூற்றுக்கு காரணமானவர்

(1) முடக்குவாதக்காரன் (2) நூற்றுவத்தலைவன்
(3) சூம்பிய கையுடையவர் (4) பார்வையற்றவர்

**(16)** இயேசுவின் தோற்றம் மாறுதல் மூலம் சீடர்கள் உணர்ந்து கொண்டது இயேசுவின்

(1) துன்புறுத்தல் பற்றி (2) விசாரணை பற்றி
(3) அன்பைப் பற்றி (4) இறைசுபாவம் பற்றி

**(17)** கடவுளின் வல்லமையால் இறையரசு வளர்ச்சியடைவதை விளக்குவது

(1) புளிப்புமா உவமை (2) அத்திமர உவமை
(3) வலை பற்றிய உவமை (4) விதைப்பவன் உவமை

**(18)** பவுலொஸ் என்னும் உரோமைப் பெயரினால் அழைக்கப்பட்டவர்

(1) லூக்கா (2) பர்னபா
(3) பிலிப்பு (4) பவுல்

**(19)** "தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன" இக் கூற்று பேசப்பட்ட இடம்

(1) லிஸ்திரா (2) இக்கோனியா
(3) பம்பிலியா (4) பெருகை

**(20)** எருசலேம் தேவாலயத்தின் எப்பகுதியில் கடவுள் வீற்றிருப்பதாக நம்பினர்

(1) அதிதூய இடம் (2) யூத ஆண்களுக்கான இடம்
(3) தூய இடம் (4) யூத பெண்களுக்கான இடம்

The National e-learning Portal for The General Education

**(21)** இன்று கிறிஸ்தவ திருச்சபையின் முக்கிய ஆயத்துவ பணியாக அமைவது

(1) தனது மந்தையை அதிகரித்தல்
(2) விடுபட்டவர்களைக் கண்டு பிடித்து சேர்த்தல்
(3) கூடிய மட்டும் தனது மந்தையைப் போஷித்தல்
(4) கிறிஸ்துவின் மந்தையை ஒற்றுமையாக்குதல்

**(22)** சேயுசு, எர்மசு, என்ற பெயரினால் அழைக்கப்பட்டவர்கள்

(1) பவுல், பர்ணபா
(2) பவுல், சீலா
(3) சீலா, பர்ணபா
(4) லூக்கா, யோவான்

**(23)** "மனிதர்களே ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தான்" என்ற பவுலின் கூற்று மூலம் விளக்குவது

(A) - முரண்பாடுகள் பிரச்சனைகளைத் தவிர்த்தல்
(B) - கடவுளுக்குரிய மேன்மையை கடவுளுக்கு மட்டும் கொடுப்பது
(C) - தாழ்மையான நடத்தையைக் காட்டுவது
(D) - துன்பங்களை சகிக்க முடியாமை

(1) BD (2) AD (3) BC (4) AC

**(24)** சிறந்த மனித வாழ்வுக்கோலத்தைக் கட்டியெழுப்பப் பொருத்தமானது

(A) தனி மனித எதிர்பார்ப்பை நிறைவேற்றுதல்
(B) நல் வாழ்வுக்கு திருமறை அடிப்படையில் வழிகாட்டுதல்
(C) இறைவனின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றல்
(D) மாறி வரும் உலகின் போக்கிற்கு ஏற்ப செயற்படுதல்

(1) AC (2) BC (3) AD (4) BD

e-தக்சலாவ
The National e-learning Portal for The General Education

❖ **பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு 25 - 28 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

(A) பவுல்
(B) யோவான் எனும் மாற்கு
(C) பர்ணபா
(D) லூக்கா
(E) சீலா

**(25)** முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் பவுலையும் அவரது குழுவினரையும் விட்டு இடை நடுவில் திரும்பியவர்

(1) D (2) E (3) C (4) B

**(26)** திருத்தூதர் பணி நூலை எழுதியவர்

(1) A (2) D (3) C (4) B

**(27)** இறை ஏவுதலின் நிமித்தம் அந்தியோக்கிய திருச்சபையில் இறை பணிக்காக தெரிவு செய்யப்பட்டோர்

(1) AD (2) CB (3) AC (4) DE

**(28)** இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் பிலிப்பி பட்டணத்தில் சிறைப்பட்டவர்கள்

(1) AC (2) AB (3) CE (4) AE

**(29)** இறை இரக்கம் கிடைக்கப் பெற்ற புறவினத்தவர்களாக இயேசுவால் குறிப்பிடப்படுவோர்

(1) சிமியோன், அன்னா
(2) அனனியா, சபீராள்
(3) சாரிபாத்கைம்பெண், நாகமான்
(4) செக்கரியா, எலிசபெத்

**(30)** இறையரசின் வளர்ச்சி பற்றிய உவமை அல்லாதது

(1) புளிப்புமா உவமை
(2) கடுகு விதை உவமை
(3) விதைப்பவன் உவமை
(4) காணாமல்போன ஆடு பற்றிய உவமை

**(31)** "செமயோன்" என்ற கிரேக்கச் சொல்லின் கருத்து

(1) தேவனுடைய பெலன்
(2) தேவனுடைய ஈவு
(3) இறைவனின் அருள்
(4) இறை நம்பிக்கை

**(32)** இயேசு பரிசேயர் ஒருவரின் வீட்டில் உணவருந்திய சந்தர்ப்பத்தில் கூறிய உவமை

(1) விதைப்பவன் உவமை
(2) பெரிய விருந்து உவமை
(3) திராட்சை செடி உவமை
(4) வலை உவமை

**(33)** "அகாபே" என்ற சொல்லின் பொருள்

(1) அன்பு
(2) நீதி
(3) இரக்கம்
(4) நம்பிக்கை

**(34)** பத்து தொழுநோயாளரைக் குணப்படுத்திய அற்புதத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும் பண்பு

(1) நம்பிக்கை
(2) நன்றியறிதல்
(3) உதவி செய்தல்
(4) ஒற்றுமை

**(35)** "என் பின்னே வாருங்கள்" எனும் அழைப்பிற்கு கிறிஸ்தவ பிள்ளை அளிக்கும் பதில்

(1) பெற்றோரின் விருப்பம்
(2) சொந்த விருப்பம்
(3) இறைவனின் சித்தம்
(4) நண்பர்களின் விருப்பம்

**(36)** கிறிஸ்தவர்களின் வாழ்வின் அடித்தளமாக அமைவது

(1) இயேசுவின் உவமைகள்
(2) சமவெளிப் போதனைகள்
(3) இயேசுவின் புதுமைகள்
(4) இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள்

**(37)** நீதியான வாழ்வின் அடிப்படையாக அமைவது

(1) கிறிஸ்துவைப் பற்றிய அறிவும் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையும்
(2) கிறிஸ்து மீது கொண்டுள்ள அளவற்ற அன்பு
(3) இயேசுவின் வாழ்வும் அவரது போதனைகளும்
(4) திருச்சட்டமும் அதன் ஒழுங்கு முறைகளும்

**(38)** ஆதிக் கிறிஸ்தவர்களின் மறைத்தூதுப் பணிகளில் உள்ளடங்காதது

(1) நற்செய்திப் பணி
(2) பகிர்வு
(3) அரும் அடையாளங்கள் செய்தல்
(4) இயேசுவின் நாமத்தில் திருமுழுக்கு வழங்கல்

**(39)** திருத்தொண்டர்களின் எண்ணிக்கை

(1) 12
(2) 72
(3) 7
(4) 9

**(40)** ஒருமைப்பாட்டுடன் கூடிய வாழ்வுக்கு ஒவ்வாத விடயமாக அமைவது

(1) ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஒன்றுபடல்
(2) ஜாதி, மத, இன பேதமின்றி அனைவருக்கும் உதவிக் கரம் நீட்டுதல்
(3) நாடுகளுக்கிடையே முரண்பாடு ஏற்படுமாயின் யுத்தத்தின் மூலம் தீர்வு காண இடமளித்தல்
(4) உலக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த அமைப்பினை உருவாக்குதல்

(40 x 1 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**(01)** (i) "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்" எனும் இறைவாக்கு எவ் இறைவாக்கினரால், யாரைக் குறித்துக் கூறப்பட்டது?

(ii) இயேசுவுக்கு நிறைவேற்றப்பட்ட யூத சடங்குகள் 2 தருக.

(iii) திருமுழுக்கு யோவான் அறிவுரை வழங்கிய பிரிவினர் இருவரைக் குறிப்படுக?

(iv) இயேசுவின் திருமுழுக்கின் பின்னர் தொழுகைக் கூடத்தில் அவரால் வாசிக்கப்பட்ட வேதபகுதி எது? அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(v) யூதனாகிய தானும் யூதர்களால் நிராகரிக்கப்பட்ட இறைவாக்கினர் என்பதை எடுத்துக்காட்ட இயேசு கூறிய முதுமொழி ஒன்று தருக.

(vi) ஓய்வு நாளில் இயேசுவால் குணமாக்கப்பட்ட இருவரைக் குறிப்பிடுக?

(vii) குழந்தை இயேசுவின் வருகைக்காக ஆலயத்தில் தரித்திருந்தவர்கள் யாவர்?

(viii) உலகெங்கும் கொடிய பஞ்சம் ஏற்படப் போகிறது என இறைவாக்குரைத்தவர் யார்?இப் பஞ்சம் எம் மன்னன் காலத்தில் ஏற்பட்டது?

(ix) முதலாம் மறைத்தூதுப் பயணம் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் 2 தருக.

(x) பவுல் லிஸ்திராவில் செய்த புதுமையை குறிப்பிடுக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

**(02)** (i) பவுலின் மனமாற்றத்தை விபரிக்குக.

(ii) இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) பவுலின் வாழ்விலிருந்து நீர் பெறும் முன்மாதிரிகள் 4 தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

**(03)** (i) இயேசு அன்பு குறித்துக் கூறிய இரு பிரதான கட்டளைகளையும் குறிப்பிடுக.

(ii) அன்பு பற்றி கொரிந்தியரில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) மனித நேயம் நலிவடைந்து செல்லும் இன்றைய சமூகத்தில் அன்பு நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப நீர் முன் வைக்கும் ஆலோசனைகள் எவை?

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

**(04)** (i) இறையரசு என்றால் என்ன?

(ii) விதைப்பவன் உவமையில் குறிப்பிடப்படும் பின்வரும் சந்தர்ப்பங்கள் உமக்கு வெளிப்படுத்தும் கருத்தினை முன் வைக்குக.

a) முட்செடிகள் நடுவே விழுந்த விதைகள்

b) பாறையின் மீது விழுந்த விதைகள்

(iii) இறையரசின் வளர்ச்சிக்காக உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் 4 தருக?

(3 +3 + 4 =10 புள்ளிகள்)

**(05)** (i) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தினர் அனுபவித்த துன்பங்கள் *2* தருக.

(ii) சதுசேயரால் இயேசுவுக்கு ஏற்பட்ட சவால்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ii) உமது வாழ்வில் நீர் எதிர்கொண்ட சவால்கள் இரண்டினை முன் வைத்து அவற்றை எவ்வாறு வெற்றி கொண்டீர் என்பதை விபரிக்குக.

(3 + 3 + 4 =10 புள்ளிகள்)

**(06)** விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

(i) நல்லாயனின் பண்புகள்

(ii) ஆதிக் கிறிஸ்தவ சபையின் செயற்பாடுகள்

(iii) கூட்டுத் தலைமைத்துவம்

(iv) துன்புறும் ஊழியன்

(2 x 5 =10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education